கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (2.5.2026) அவரது இல்லத்தில், முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி சந்தித்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் நேற்று (2.5.2026), சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், 2026-2027ஆம் ஆண்டு 12ஆம் வகுப்பு முடித்து கல்லூரிகளில் முதலாமாண்டு சேரவிருக்கும் மாணவர்களுக்கு உதவிடும் வகையில், தி.மு.க. மாணவர் அணியின் சார்பில் உருவாக்கப்பட்ட "TSC HELP DESK"னை தொடங்கி வைத்தார். அதுபோது கழக துணைப் பொதுச்செயலாளர்கள் ஆ.இராசா,எம்.பி., அமைச்சர் மு.பெ.சாமிநாதன், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் – அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா கழக மாணவர் அணிச் செயலாளர் திருமதி வீரமணி, துணைச் செயலாளர்கள் மன்னை த.சோழராஜன், வி.ஜி.கோகுல் மாவட்ட அமைப்பாளர்கள் சென்னை தென்மேற்கு விஜய், சரவணன், சத்யா மற்றும் 50க்கும் மேற்பட்ட தமிழ் மாணவர் மன்ற நிர்வாகிகள் உடனிருந்தனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களை நேற்று (2.5.2026), சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், தமிழ்நாடு வணிகர் சங்கப் பேரமைப்பின் தலைவர் ஏ.எம். விக்கிரமராஜா, பொருளாளர் ஏ.எம்.சதக்கத்துல்லா, மாநில கூடுதல் செயலாளர் சேப்பாக்கம் வி.பி. மணி, மாவட்ட தலைவர்கள் என்.டி. மோகன், எஸ் சாமுவேல், பி. ஆதிகுருசாமி, ஒய். எட்வர்ட் மற்றும் நிர்வாகிகள் நேரில் சந்தித்து, மே-5ஆம் தேதி 43வது வணிகர் தினத்தையொட்டி திருவாரூரில் நடைபெற உள்ள "வணிகர் விழிப்புணர்வு எழுச்சி மாநாட்டிற்கான அழைப்பிதழை வழங்கினார்கள். அதுபோது கழக துணைப் பொதுச்செயலாளர்கள் ஆ.இராசா,எம்.பி., அமைச்சர் மு.பெ.சாமிநாதன், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் – அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா ஆகியோர் உடனிருந்தனர்.

கலைச்சேவை, கல்விச் சேவை இரண்டையும் தமது வாழ்வின் இருபெரும் இலட்சியங்களாகக் கொண்டு வாழ்ந்த பெருமைக்குரியவர்!

குமாரராணி – முனைவர் மீனா முத்தையா மறைவு!

இரங்கல் செய்தியில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

சென்னை, மே 3-

செட்டிநாட்டு அரசர் குடும்பத்தைச் சேர்ந்த குமாரராணி முனைவர் திருமிகு மீனா முத்தையா அவர்கள் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து தமிழ்நாடு முதலமைச்சர் – கழகத் தலைவர் அவர்கள் விடுத்துள்ள செய்தி வருமாறு:-

செட்டிநாட்டு அரசர் குடும்பத்தைச் சேர்ந்த குமாரராணி முனைவர் திருமிகு மீனா முத்தையா அவர்கள் மறைவுற்ற செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

கலைச்சேவை, கல்விச் சேவை இரண்டையும் தமது வாழ்வின் இருபெரும்

இலட்சியங்களாகக் கொண்டு வாழ்ந்த பெருமைக்குரியவர் திருமிகு மீனா முத்தையா அவர்கள்.

தஞ்சாவூர்க் கலைக்குப் புத்துயிர் கொடுத்து, அதற்காகவே குமாரராஜா முத்தையா கலை மற்றும் கைவினைக் கலைப் பள்ளியின் மூலம் பயிற்சியும் அளித்து வந்த அவரது பணிகள் என்றென்றும் நினைவுகூரப்படும்.

தனிப்பட்ட முறையிலும் எங்க எது குடும்பத்துடன் இனிய நட்புற வைப் பேணி வந்த அவர், எனது துணைவியாரின் நூல் வெளியீட்டு விழாவிலும் 2018ஆம் கலந்து கொண்டு உரையாற்றியதை இவ் வேளையில் நினைவுகூர்கிறேன்.

திருமிகு மீனா முத்தையா அவர் களது மறைவால் வாடும் அவரது குடும்பத்தினர்கள், உறவினர்கள், நண்பர்கள், நிறுவனங்களில் பணி யாற்றும் ஊழியர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

ஓட்டல் உணவுகளின் விலை உயர்வால் கட்டுமானத் தொழிலாளர்கள் பாதிப்பு!

கேஸ் சிலிண்டர் விலை உயர்வை திரும்பப் பெற வேண்டும்!

விவசாயிகள்-தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் கோரிக்கை!

சென்னை, மே 3-

விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

வணிக கேஸ் சிலிண்டர்களின் விலை ரூபாய் 990.50 உயர்த்தப்பட்டுள்ளது விலைவாசி உயர்விற்கு வழிகோலும். குறிப்பாக ஓட்டல் தொழில் நசிவடையும், உணவு பண்டங்களின் விலைக் கடுமையாக ஏறும். இதனால் தொழிலாளர்கள் மிகப்பெரிய இன்னல்களுக்கு ஆளாவார்கள். இந்த செயல் வன்மையானக் கண்டனத்திற்குரியதாகும்.

ஐந்து மாநில சட்டப் பேரவை தேர்தல் முடியும் வரை கள்ள மனம் காத்த மோடி அரசு தேர்தல் முடிந்தவுடன் ஒரே அடியாக சிலிண்டர் விலையை 990 ரூபாய் அளவிற்கு உயர்த்திருக்கிறது. ஏற்கனவே 2246 ரூபாய் விற்ற சிலிண்டர் விலை தற்போது 3237 ரூபாயாக விலை உயரும். விலை உயர்வு ஒரு பக்கம். இன்னொரு பக்கம் சிலிண்டர் தட்டுப்பாடு. இதனால் வணிகர்கள் கள்ள சந்தையில் சிலிண்டர் வாங்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். ஏற்கனவே கள்ள சந்தையில் ரூபாய் 6 ஆயிரம் வரை விலைக் கொடுத்து வாங்க வேண்டிய நிலையில், தற்போது இது இரண்டு மடங்காக உயரும். இதனால் அனைத்து விலைவாசிகளும் உயர்வதற்கு வாய்ப்பாகிவிடும். குறிப்பாக தேநீர் கடை, ஓட்டல் போன்ற உணவு நிறுவனங்களின் வழங்கப்படும் உணவுப் பொருட்களின் விலை அபரீதமாக உயரும் அபாயம் உள்ளது.

கட்டுமானத் தொழிலாளர்கள் போன்ற கோடிக்கணக்கான அமைப்புசாராத் தொழிலாளர்கள் தேநீரையும், மதிய உணவிற்கு ஓட்டல்களையும் நம்பி உள்ளவர்கள் பெரும் பாதிப்பிற்குள்ளாவார்கள். உணவு நிறுவனங்கள் மூடக்கூடிய பேராபத்து ஏற்படும். தொழிலாளர்கள் வேலை இழக்கக் கூடிய அபாயம் நேரும். இவற்றையெல்லாம் கொஞ்சம் கூட சிந்திக்காத மோடி அரசு மேற்காசிய போரை காரணம் காட்டி விலையை உயர்த்திருப்பது மிகுந்த கண்டனத்திற்குரியதாகும். இந்த நிலையில் விரைவில் பெட்ரோல், டீசல் விலையும் உயர்த்தப்படும் பேராபத்து நிலவி வருகிறது. இதனால் ஒட்டுமொத்த பொருளாதாரம் பாதிக்கக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே உணவு நிறுவனங்கள், அதில் பணியாற்றும் தொழிலாளர்கள், தேநீர் மற்றும் ஓட்டல் உணவுகளை மட்டுமே நம்பி உள்ள கோடிக்கணக்கானத் தொழிலாளர் போன்றவர்களை கருத்தில் கொண்டு ஏற்றப்பட்ட விலையை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என ஒன்றிய அரசை விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு பொன்குமார் தெரிவித்துள்ளார்.

மேற்குவங்க வாக்கு எண்ணிக்கை

தேர்தல் ஆணையத்துக்கு உச்சநீதிமன்றம் உத்தரவு!

கொல்கத்தா, மே. 3-

மேற்கு வங்கத்தில் வாக்கு எண்ணிக்கையின் போது ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசு பணியாளர்களை கலந்து நியமிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையத்துக்கு உச்சநீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேற்குவங்க சட்டப்பேரவை இரண்டு கட்டங்களாக சட்டப்பேரவை தேர்தல் நடைபெற்று முடிவடைந்துள்ளது. இந்த தேர்தலில் பதிவான வாக்குப்பதிவு இயந்திரங்கள் அனைத்தும் வாக்கு எண்ணும் மையங்களில் பலத்த பாதுகாப்புடன் வைக்கப் பட்டுள்ளன.

இந்நிலையில், வாக்கு எண்ணிக்கை மேற்பார்வை பணிகளுக்கு ஒன்றிய அரசு ஊழியர்களை மட்டுமே தேர்தல் ஆணையம் நியமித்துள்ளதாக புகார் எழுப்பி உச்சநீதிமன்றத்தில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சி வழக்கு தொடர்ந்து இருந்தது. இந்த வழக்கை அவசர வழக்காக விசாரிக்க வேண்டும் என்று திரிணாமுல் காங்கிரஸ் கோரிக்கை வைத்தது.

இதனைத் தொடர்ந்து இந்த வழக்கை விசாரிக்க சிறப்பு அமர்வு அமைக்கப் பட்டது. நீதிபதி நரசிம்மா தலைமையிலான அமர்வில் வழக்கு விசாரணைக்கு வந்தது. அப்போது, ஏற்கனவே ஒவ்வொரு மேசையிலும் ஒரு மைக்ரோ பார்வையாளரை ஒன்றிய அரசு பார்வையாளராக நியமித்துள்ளது. இதற்கு மேலும் ஒரு மத்திய பார்வையாளர்நியமிக்கப்பட்டு வருவதாக கபில் சிபில் குற்றம் சாட்டினார். மாநில அரசு பணியாளர்களையும் மேற்பார்வையாளர்களாக நியமிக்க வேண்டும் என்று அவர் வாதிட்டார்.

இதனைத் தொடர்ந்து தேர்தல் ஆணையத்தின் சுற்றறிக்கையில் ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசு ஊழியர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்ற தேர்தல் விதிமுறையை நீதிபதிகள் சுட்டிக்காட்டினர். அதன்படியே நியமனம் நடத்தப் பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தரப்பில் வாதிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து, மாநில அரசு ஊழியர்கள் மற்றும் ஒன்றிய அரசு ஊழியர்கள் இருவரையும் மேற்பார்வை பணிகளுக்கு கலந்து நியமிக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் தெரிவித்தது. தேர்தல் ஆணையம் தனது சொந்த சுற்றறிக்கையை முறைப்படி அமல்படுத்த வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டு வழக்கை முடித்து வைத்தது.

பெரியாரியல் அறிஞர்

வே.ஆனைமுத்துவின் மூத்த மருமகன் மறைவு!

கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, மே 3-

பெரியாரியல் அறிஞர் தோழர் வே.ஆனைமுத்து அவர்களின் மூத்த மருமகன், ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் சீனு அரிமாப்பாண்டியன் (அரிகிருட்டிணன்) அவர்கள் 1.5.2026 வெள்ளிக் கிழமை விடியற்காலை 4.00 மணிக்கு சென்னை போரூர் இராமச்சந்திரா மருத்துவ மனையில் இயற்கையில் கலந்தார்.

இச்செய்தியறிந்ததும் கழகத்தினர் அன்னாரது உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

இன்று (3.5.2026 - ஞாயிறு) காலை அவரது உடல் புதுவை இல்லத்திற்குக் கொண்டு வரப்பட்டு மாலை வீரவணக்க இறுதிஊர்வலம் நிகழும்.

மே 4ஆம் தேதி நடைபெறவுள்ள 2026 சட்டமன்றத் தேர்தல் வாக்கு எண்ணிக்கையின் போது மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட திருவள்ளூர், திருத்தணி ஆகிய இரண்டு சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்குச்சாவடி முகவர்களுக்கு திமுக தலைமை சார்பில் காணொளி காட்சி மூலம் ஆலோசனை கூட்டம் திருவள்ளூரில் அமைந்துள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் தலைமையில் நடைபெற்றது. பயிற்சி கூட்டத்தில் சட்டத்துறை செயலாளர் என்.ஆர்.இளங்கோ, கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் கலந்து கொண்டு வாக்கு எண்ணிக்கையின்போது முகவர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து எடுத்துரைத்தனர். உடன் திருவள்ளூர் சட்டமன்ற திமுக வேட்பாளர் வி. ஜி.ராஜேந்திரன், திருத்தணி சட்டமன்றத் தொகுதி திமுக கூட்டணி தேமுதிக வேட்பாளர் டி.கிருஷ்ணமூர்த்தி உள்பட மாவட்ட ஒன்றிய நகர நிர்வாகிகள், திமுக பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள் , துணை அமைப்பாளர்கள், மற்றும் திருவள்ளூர் திருத்தணி சட்டமன்ற தொகுதிக்கு நியமிக்கப்பட்ட வாக்குச்சாவடி முகவர்கள் உள்ளனர்.

முரசொலி விநியோகப் பிரிவு

ஆர்.பழனி முதலாம் ஆண்டு நினைவு நாள்!

செங்கல்பட்டு, மே.3-

முரசொலி விநியோகப் பிரிவில் பணியாற்றி வந்த ஆர்.பழனி வயது 38 (03.05.2025) சென்ற ஆண்டு மறைவெய்தினார். அதனை ஒட்டி இன்று (03.05.2026 - ஞாயிற்றுக் கிழமை) அவரது முதலாம் ஆண்டு நினைவு நாள்

கடைப்பிடிக்கப்படுகிறது.

செங்கல்பட்டு மாவட்டம் வாலாஜாபாத் வட்டம் நெய்யாடுபாக்கம் கிராமத்தில் அவரது இல்லத்தில் உள்ள திருவுருவப் படத்திற்கு அன்னாரது குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் மலர் மாலை வைத்து நினைவஞ்சலி செலுத்துகின்றனர்.

நடைபெற்று முடிந்த 2026 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, கழகச் சட்டத்துறையின் சார்பில் வாக்கு எண்ணும் முகவர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் காணொலி வாயிலாக நடைபெற்றது. சென்னை மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஆயிரம்விளக்கு, அண்ணாநகர் மற்றும் சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி ஆகிய சட்டமன்றத் தொகுதிகளின் வாக்கு எண்ணும் முகவர்களுடன், நுங்கம்பாக்கத்தில் உள்ள ராமாதிருமண மண்டபத்தில் கலந்து கொண்டு ஆலோசனைகளை பெற்றனர். மேலும் இக்கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளரும் அண்ணா நகர் தொகுதி வேட்பாளருமான நே.சிற்றரசு, ஆயிரம் விளக்கு தொகுதி வேட்பாளர் மருத்துவர் எழிலன், பகுதி செயலாளர்கள், தொகுதி தேர்தல் பொறுப்பாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட அமைப்பாளர்கள், வாக்கு எண்ணும் முகவர்கள் என அனைவரும் பங்கேற்றனர்.